# மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கை 110ஆக உயர்வு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!... 

முதல் பக்கத் தொடர்ச்சி

### 18.சேலம்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 50 | சேலம் மேற்கு | மேட்டூர், எடப்பாடி |
| 51 | சேலம் தெற்கு | சங்ககிரி, வீரபாண்டி |
| 52 | சேலம் வடக்கு | ஏற்காடு (ப.கு), ஓமலூர் |
| 53 | சேலம் மத்திய | சேலம் வடக்கு, சேலம் தெற்கு, சேலம் மேற்கு |
| 54 | சேலம் கிழக்கு | கெங்கவல்லி (தனி), ஆத்தூர் (தனி) |

### 19.புதுக்கோட்டை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 55 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை (தனி), புதுக்கோட்டை |
| 56 | புதுக்கோட்டை மேற்கு | விராலிமலை, திருமயம் |
| 57 | புதுக்கோட்டை கிழக்கு | ஆலங்குடி, அறந்தாங்கி |

### 20.கரூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 58 | கரூர் மேற்கு | அரவக்குறிச்சி, கரூர் |
| 59 | கரூர் கிழக்கு | கிருஷ்ணராயபுரம் (தனி), குளித்தலை |

### 21.அரியலூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 60 | அரியலூர் | அரியலூர், ஜெயங்கொண்டம் |

### 22.பெரம்பலூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 61 | பெரம்பலூர் | பெரம்பலூர் (தனி), குன்னம் |

### 23.திருச்சி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 62 | திருச்சி கிழக்கு | லால்குடி, மணச்சநல்லூர் |
| 63 | திருச்சி மத்திய | திருவரங்கம், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு |
| 64 | திருச்சி வடக்கு | முசிறி, துறையூர் (தனி) |
| 65 | திருச்சி தெற்கு | மணப்பாறை, திருவெறும்பூர் |

### 24.திருவாரூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 66 | திருவாரூர் வடக்கு | திருவாரூர், நன்னிலம் |
| 67 | திருவாரூர் தெற்கு | திருத்துறைப்பூண்டி (தனி), மன்னார்குடி |

### 25.நாகப்பட்டினம்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 68 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், கீழ்வேளூர் (தனி), வேதாரண்யம் |

### 26.மயிலாடுதுறை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 69 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை, சீர்காழி (தனி), பூம்புகார் |

### 27.கடலூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 70 | கடலூர் மேற்கு | திட்டக்குடி (தனி), விருத்தாச்சலம் |
| 71 | கடலூர் வடக்கு | நெய்வேலி, பண்ருட்டி |
| 72 | கடலூர் தெற்கு | புவனகிரி, காட்டுமன்னார்கோவில் (தனி), சிதம்பரம் |
| 73 | கடலூர் கிழக்கு | கடலூர், குறிஞ்சிப்பாடி |

### 28.தஞ்சாவூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 74 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் (தனி), கும்பகோணம் |
| 75 | தஞ்சாவூர் மேற்கு | பாபநாசம், திருவையாறு |
| 76 | தஞ்சாவூர் கிழக்கு | தஞ்சாவூர், ஒரத்தநாடு |
| 77 | தஞ்சாவூர் தெற்கு | பட்டுக்கோட்டை, பேராவூரணி |

### 29.கள்ளக்குறிச்சி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 78 | கள்ளக்குறிச்சி மேற்கு | ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி (தனி) |
| 79 | கள்ளக்குறிச்சி கிழக்கு | உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம் |

### 30.விழுப்புரம்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 80 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி, மைலம் |
| 81 | விழுப்புரம் தெற்கு | விக்கிரவாண்டி, திருக்கோயிலூர் |
| 82 | விழுப்புரம் மத்திய | திண்டிவனம் (தனி), வானூர் (தனி), விழுப்புரம் |

### 31.திருவண்ணாமலை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 83 | திருவண்ணாமலை தெற்கு | திருவண்ணாமலை, செங்கம் (தனி) |
| 84 | திருவண்ணாமலை மத்திய | கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம் |
| 85 | திருவண்ணாமலை வடக்கு | போளூர், ஆரணி |
| 86 | திருவண்ணாமலை கிழக்கு | வந்தவாசி (தனி), செய்யாறு |

### 32.திருப்பத்தூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 87 | திருப்பத்தூர் வடக்கு | வாணியம்பாடி, ஆம்பூர் |
| 88 | திருப்பத்தூர் தெற்கு | ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் |

### 33.வேலூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 89 | வேலூர் வடக்கு | காட்பாடி, கீழ்வைத்தினான்குப்பம் (தனி) |
| 90 | வேலூர் தெற்கு | வேலூர், அணைக்கட்டு, குடியாத்தம் (தனி) |

### 34.இராணிப்பேட்டை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 91 | இராணிப்பேட்டை வடக்கு | அரக்கோணம் (தனி), சோளிங்கர் |
| 92 | இராணிப்பேட்டை தெற்கு | இராணிப்பேட்டை, ஆற்காடு |

### 35.செங்கல்பட்டு

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 93 | செங்கல்பட்டு கிழக்கு | திருப்போரூர், செய்யூர் (தனி) |
| 94 | செங்கல்பட்டு மேற்கு | செங்கல்பட்டு, மதுராந்தகம் (தனி) |
| 95 | செங்கல்பட்டு வடக்கு | பல்லாவரம், தாம்பரம் |

### 36.காஞ்சிபுரம்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 96 | காஞ்சிபுரம் வடக்கு | ஆலந்தூர், திருப்பெரும்புதூர் (தனி) |
| 97 | காஞ்சிபுரம் தெற்கு | உத்திரமேரூர், காஞ்சிபுரம் |

### 37.திருவள்ளூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 98 | திருவள்ளூர் கிழக்கு | கும்மிடிப்பூண்டி, பொன்னேரி (தனி) |
| 99 | திருவள்ளூர் மத்திய | பூவிருந்தவல்லி (தனி), ஆவடி |
| 100 | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி, திருவள்ளூர் |

### 38.சென்னை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 101 | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர், மாதவரம் |
| 102 | சென்னை வடக்கு | பெரம்பூர், கொளத்தூர் |
| 103 | சென்னை வடமேற்கு | இராயபுரம், ஆர்.கே.நகர் |
| 104 | சென்னை மத்திய | எழும்பூர் (தனி), அண்ணா நகர் |
| 105 | சென்னை மத்திய - கிழக்கு | சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு |
| 106 | சென்னை மத்திய - மேற்கு | மதுரவாயல், அம்பத்தூர் |
| 107 | சென்னை கிழக்கு | துறைமுகம், திரு.வி.க.நகர் (தனி), வில்லிவாக்கம் |
| 108 | சென்னை தென்மேற்கு | விருகம்பாக்கம், தியாகராயர் நகர் |
| 109 | சென்னை தென்கிழக்கு | சைதாப்பேட்டை, மயிலாப்பூர், வேளச்சேரி |
| 110 | சென்னை தெற்கு | சோழிங்கநல்லூர் |

**அறிவிக்கப்பட்டுள்ள இந்த 110 மாவட்டக் கழகங்களில் தற்போதுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில் மாவட்டச் செயற்குழுவைக் கூட்டி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள கழக மாவட்டங்களின் அடிப்படையில், நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் - வட்ட - கிளை அமைப்புகளைப் பிரிப்பதற்கான பரிந்துரைகளை 15 நாட்களுக்குள் வழங்கிட வேண்டும் என்றும், தலைமைச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், கழக மறுசீரமைப்புக்குழு மூலம் வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, கழக அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே மாதத்தில் அல்லலுக்கு உள்ளான மக்கள்!

# கடும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ரேஷன் கடைகளில் கூடுதலாகப் பொருட்களை வழங்கிடுக!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, ஆக. 30 -**

**“த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே மாதத்தில் மக்கள் அல்லலுக்கு உள்ளாகியுள்ளனர்” என்றும் “கடும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ரேஷன் கடைகளில் கூடுதலாகப் பொருட்களை வழங்கிட வேண்டும்” என்றும் சட்டப் பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்.**

அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதையடுத்து சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அவையிலே உங்களுடைய கவனத்துக்கு எடுத்து வர விரும்புகின்றேன்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி தற்போது நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே இருக்கின்றது. அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை என்ற எந்தப் பொருளை எடுத்தாலும், கடந்த மூன்று மாதங்களில் அவற்றின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கின்றது.

### விலை கடுமையாக உயர்வு!

ஏழை, எளிய, நடுத்தர வர்க்க பொதுமக்கள் மிகவும் அல்லலுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். குறிப்பாக, இந்த அரசு அமைந்ததிலிருந்து அத்தியாவசியப் பொருட்களுடைய விலை கடுமையாக உயர்ந்திருக்கின்றது.

மே மாதம் ஒரு கிலோ அரிசி 55 ரூபாய்க்கு விற்பனையானது, இன்றைக்கு 75 ரூபாய். மே மாதம் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 40 ரூபாய், இன்றைக்கு கிலோ 80 ரூபாய். மே மாதம் ஒரு கிலோ துவரம் பருப்பு 150 ரூபாய், இன்றைக்கு கிலோ 180 ரூபாய். மே மாதம் ஒரு கிலோ சர்க்கரை ரூபாய் 40, இன்றைக்கு ஒரு கிலோ சுமார் 70 ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது.



இந்த விலை ஏற்றத்தால், மக்கள் மிகவும் பாதிப்படைந்திருக்கிறார்கள். மளிகைக் கடை பக்கம் போவதையே குறைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. உங்களுடைய ஆளுங்கட்சியின் கூட்டணியில் இருக்கக் கூடிய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் இதைக் கண்டித்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

### சிறப்பு பொது விநியோகம்!

இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த, அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணத்திற்கு 2007ஆம் ஆண்டு தேசிய அளவில் கடுமையான விலைவாசி உயர்வு ஏற்பட்டது. அப்பொழுது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகள் மூலமாக பருப்பு, எண்ணெய், ரவா, மைதா உள்ளிட்ட பொருட்களை, சந்தை விலையை விட குறைவான விலைக்கு மக்களுக்கு வழங்கினார்கள். அது மட்டுமல்லாமல் கடுகு, சீரகம், வெந்தயம் உள்ளிட்ட 10 மளிகைப் பொருட்களை 50 ரூபாய்க்கு வழங்கினார்கள்.

கலைஞர் அவர்கள் 2007இல் தொடங்கி வைத்த, அந்த சிறப்புப் பொது விநியோகத் திட்டம் தற்போது வரை நடைபெற்று வருகிறது. ரேஷன் கடைகள் மூலமாக சர்க்கரை மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தற்போது வழங்கப்படுகின்ற அளவை விட, இன்னும் கூடுதல் அளவு வழங்கிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன். முக்கிய மாக, முதலமைச்சர் தலைமையில் நிதி, உணவு, கூட்டுறவு உள்ளிட்ட துறைகளின் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்கின்ற வகையில் ஒரு சிறப்பு ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தி, விலைவாசி உயர்வுப் பிரச்சினைக்கு இந்த அரசு, உடனடியாக ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.